நலன்புரி நன்மைகள், கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியான நபர்களை / குடும்பங்களை தெரிவுசெய்வதற்கான கள ஆய்வு

தரவு உள்ளீடு செய்யும் எண்ணீட்டாளர்களுக்கான பொறுப்புக்கள் தொடர்பான வழிகாட்டற் கையேடு

நலன்புரி நன்மைகள் சபை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

சமூக பாதுகாப்பு தகவல் முறைமை (Social Registry Information System)

சர்வதேச அளவில், உலகில் எத்தனையோ வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலனுக்கான தகுதியையு டைய சமூகங்கள் மற்றும் சமூகத்தாற் பராமரிக்கப்பட வேண்டிய நபர்களை அடையாளம் காண ஒரு செயல் முறை மற்றும் சமூக பாதுகாப்பு தகவல் முறைமையை உருவாக்க உழைத்துள்ளன என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்

தற்போது, சமூகப் பாதுகாப்புப் நன்மைகளை வழங்கிவைப்பதற்காக தனிநபர்கள் மற்றும் குடும்பங்களைக் கண்டறி ஒரு ஒருங்கிணைந்த மற்றும் மையப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் தகவல் அமைப்பை நலன்புரி நன்மைகள் சபை நிறுவியுள்ளது. தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையை வெளிப்படையான மற்றும் திறமையான முறையில் செயல்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த தரவு முறைமையை கையாள்வதற்காக தற்போது அனைத்து பிரதேச செயலகங்களிலும் நலன்புரி நன்மை தகவல் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மொபைல் செயலியின் மென்பொருளூடாக இந்தத் தரவு அமைப்பில் களத் தரவு சேகரிக்கப்படுகிறது.

இந்த சமூக பாதுகாப்பு தகவல் முறைமையினால் பின்வரும் செயல்பாடுகளைச் செய்ய முடியும்.

- பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்கள்/திட்டங்களை செயல்படுத்துதல்.
- மேன்முறையீடு / ஆட்சேபனைகள் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தீர்வு வழங்கல்
- விண்ணப்பங்களை பதிவுசெய்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்
- களத்தில் மொபைல் செயலியின் மூலம் தரவு சேகரித்தல்.
- பரிமாணங்கள் மற்றும் சுட்டிகள் அடிப்படையில் தெரிவு மதிப்பெண்களை வழங்குதல்
- பயனாளிகளித்த தெரிவுசெய்தல்
- பயனாளிகளின் தகவல்களை உரிய நேரத்தில் புதுப்பித்தல். மதிப்பீடு மற்றும் மேற்பார்வை செய்தல்
- பிற தரவு முறைமைகளுடன் ஒருங்கிணைக்கும் திறன்.

தெரிவு அளவுகோல்கள் மற்றும் சுட்டிகள்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், நலன்புரி நன்மைகள் பெறுவதற்குத் தகுதியான தனிநபர்கள் / குடும்பங்களைக் கண்டறிந்து மதிப்பெண்களை வழங்குவதற்கான அளவுகோல்களையும் சுட்டிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. தெரிவுச் செயல்முறை மற்றும் மதிப்பெண் வழங்கும் வழிமுறை சமூக பாதுகாப்பு தகவல் முறைமையில் இணைக்கப்பட்டுள்ளது. தரவு சேகரிப்பு மொபைல் செயலியின் வினாத்தாள்கள் மேலே உள்ள தெரிவு அளவுகோல்கள் மற்றும் சுட்டிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து எண்ணீட்டாளர்களும், நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்ட 20.10.2022 ஆம் திகதி 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை வாசித்து விளங்கிக்கொள்ளவேண்டும். தரவு சேகரிப்பிற்கு களத்திற்குச் செல்வதற்கு முன், எண்ணீட்டு உத்தியோகத்தர் தாங்கள் தரவு சேகரிக்கும் அளவுகோல்கள் மற்றும் சுட்டிகளைப்பற்றிய புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். 6 முக்கிய அளவுகோல்களின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களை அடையாளம் காண்பது தொடர்பான 22 குறிகாட்டிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன..

அளவுகோல்கள்	சுட்டிகள்
கல்வி	➢ குடும்ப உறுப்பினர்களின் கல்வி மட்டம். ➢ இடைப்பட்ட பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை.
சுகாதாரம்	➢ நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள் , ➢ அங்கவீனமுற்ற குடும்ப உறுப்பினர்கள்.
பொருளாதார மட்டம்	➢ மாதாந்த தலைக்குரிய செலவினம். ➢ மாதாந்த தலைக்குரிய வருமானம். ➢ மாதமொன்றுக்கு 60 அலகுகளை வீடாக குறைவான மின்சாரப் பாவனை.
சொத்து	➢ குடும்ப உறுப்பினருக்கு வாழுகின்ற வீடு மற்றும் காணியின் உரிமை இல்லாதிருத்தல், ➢ குடும்ப உறுப்பினருக்கு ஏனைய வீட்டு உரிமை அல்லது கட்டிடமொன்று இல்லாதிருத்தல், ➢ குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது 0.5 ஏக்கர் பயிர்ச்செய்கை மேட்டுநிலம் காணப்படாமை. ➢ குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு ஏக்கர் நெற்செய்கை நிலம் காணப்படாமை. ➢ போக்குவரத்துச் சாதனமாக (மோட்டார் சைக்கிள் 125 CC , முச்சக்கர வண்டி ,கார் , வான் , ஜீப் ,பஸ் , லொறி , ரிப்பர் ,கை டிரக்டர்(2 சில்லு), டிரக்டர் (4 சில்லு) என்பனவற்றில் ➢ ஒன்றையேனும் சொத்தாகக் கொண்டிராதிருத்தல். ➢ பொருளாதாரம் சார்பாக ஆக்க குறைந்தத ஒரு சொத்தாக (மீன்பிடிப்படகு , இணைந்த அறுவடை இயந்திரம், சூடடித்தல் இயந்திரம்) ஒன்றையேனும் கொண்டிராதிருத்தல். ➢ வாழ்வாதாரம் சார்பாக ஆகக் குறைந்தது ஒரு சொத்தாக (கறவைப் பசு 05 , ஆடுகள் 20 , கோழிகள் 50 , வாத்து 20 , தாரா 10) எவற்றையேனும் கொண்டிராதிருத்தல்.

வீடமைப்பு	➢ லைன் அறை/ வரிசை வீடு/ முடுக்கு/ மடுவம் போன்ற ஏனையவற்றில் வாழ்தல். ➢ நிரந்தர சுவர் , நிரந்தர தரை,நிரந்தர கூரை கொண்ட வாழ்விடம் ஒன்றினை கொண்டிராதிருத்தல். 500 சதுர அடியிற்கு குறைவான மொத்தத் தரைப் பிரதேசம். ➢ சுத்தமான குடிநீர் வசதி காணப்படாமை. ➢ போதிய சுகாதாரவேற்பாட்டு வசதி காணப்படாமை. ➢ மின்சார இணைப்பிற்கான வசதி காணப்படாமை.
குடும்ப மக்கள் தொகை	➢ தங்கிவாழும் விகிதம் (0 -14) வயது வரையானவர்களினதும் மற்றும் 65 வயதுடையவர்களினதும் மொத்த எண்ணிக்கையின் கீழ் 15 - 64 வயதானவர்களின் எண்ணிக்கை) 0.64 சதவீதத்திற்கு அதிகமாக்க காணப்படுதல். ➢ ஒற்றைப் பெற்றோர் குடும்பம்.

<u>அறிமுகம்</u>

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் பிரிவு 7(1) இன் படி நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுளைப் பெறுவதற்கு தகுதியான அனைத்து நபர்களையும் அடையாளம் காண அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்காக, அஸ்வெசுமநலன்புரி நன்மை கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் இதுவரை செயற்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக வீடுகளுக்குச் சென்று எண்ணீட்டினை சரியாக மேற்கொள்வதே நலன்புரி நன்மைகள் சபையின் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் நலன்புரி நன்மை கொடுப்பனவுகளை வழங்குவதில் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பாதுகாக்க முடியும்.

அதன்படி, அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பித்த மற்றும் தரவுகளைப் புதுப்பிக்கும் அனைத்து பயனாளிகளின் வீடுகளுக்குச் செல்லும் எண்ணீட்டாளர்கள் இந்த வழிகாட்டிக் கையேட்டினைப் பின்பற்ற வேண்டும். தகவல்களைப் பெறும் பணியில் ஈடுபடும் எண்ணீட்டாளர்கள் தங்களது ஸ்மார்ட்போன் மற்றும் மொபைல் செயலியைப் பயன்படுத்தி இந்த கட்டத்தை முடிக்க வேண்டும். இந்த கையேடு, மொபைல் மென்பொருளைப் பயன்படுத்த தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் மற்றும் கேள்வித்தாளின் கருத்தியல் விளக்கங்களை விவரிக்கிறது. எனவே களத்திற்குச் செல்வதற்கு முன், இந்த வழிகாட்டுதல்களை கவனமாகப் படித்து விளங்கிக்கொள்ளவேண்டும்.

எண்ணீடு செய்வதற்கு முன்னரான தயார்நிலை

எண்ணீட்டாளர்கள் தங்களது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசியை இந்தக் கள ஆய்வுக்கு பயன்படுத்தி வருவது மிகவும் பாராட்டுக்குரியது. தரவு சேகரிப்புக்குக் கையடக்கத் தொலைபேசி பின்வருமாறு அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

உங்களது கையடக்க தொலைபேசியில் காணப்படவேண்டியவை

- கேமராவுடன் 3G புகைப்படக் கேமராவாக இருப்பது.
- பேட்டரி நீண்ட நேரம் சார்ஜ் இருக்ககூடியது.
- தரவு சேகரிப்பை எளிதாக்கும் வகையில் சேமிப்பு இட வசதியை கொண்டதாக இருத்தல்.
- தொலைபேசி சேவை வசதிகள் கிடைக்கும் வகையில் இருத்தல்.
- மொபைல் செயலியை கையடக்கத் தொலைபேசியில் நிறுவியிருப்பது.
- குறைந்தபட்சம் **Android Version 5.0** கொண்டதாக இருக்கவேண்டும்.

தரவுகளை சேகரிக்கும் கணக்கெடுப்பு கள உத்தியோகத்தர்களின் பங்கு

பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம மட்டத்தில் துல்லியமான தரவு சேகரிப்புக்கான உறுப்பினராக நியமிக்கப்பட்ட எண்ணீட்டாளர்களின் பங்கு பின்வருமாறு. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிட்கும் ஒதுக்கப்பட்டுள்ள எண்ணீட்டாளர்கள் நலன்புரி பயன்களுக்காக விண்ணப்பித்த வீட்டுப் பிரிவுக்குச் சென்று குடும்ப / தனி நபர்களின் தகவல்களைப் பெற தங்களின் : ஸ்மார்ட் போன் கைத்தொலைபேசியில் Google Play Store மூலம் பெறப்பட்ட (Mobil App) IWMS என்ற செயலி மூலம் அவர்களது தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் போது எண்ணீட்டு உத்தியோகத்தர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விவரங்கள்

- விண்ணப்பதாரர் வழங்கிய ஒவ்வொரு தகவலையும் உள்ளிடுவதற்காக , முடிந்தவரை சரியான உண்மைகளை வெளிப்படுத்தி (கலந்துரையாடல் மற்றும் மேலதிக விசாரணை மூலம்) சேர்ப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். தவறான தகவல்களை முன்வைக்கும் போது, அது தகுதியற்றவர்களுக்கு நன்மையளிக்கும் மற்றும் தகுதியானவர்களுக்குரிய நன்மைகளை பறிக்கும் விளைவை ஏற்படுத்துகிறது.

- ❋ மூலம் குறிப்பிடப்பட்ட கட்டாயத் தகவல், மதிப்பெண் பெறும் முறையில் சேர்க்கப்பட்டுள்ளதால், அந்தத் தகவலை விட்டுவிடாமல், முடிந்தவரை துல்லியமாக உள்ளிடுவதற்குக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

- கேள்விகளை நேரடியாகக் கேட்பதற்குப் பதிலாக, விண்ணப்பதாரரையும் அவரது உறவினர்களையும் நட்புரீதியான கலந்துரையாடல் மூலம் தொடர்பு கொண்டு, முடிந்தவரை சரியான தகவல்களைப் பெற முயற்சிக்க வேண்டும்.

- எண்ணீட்டாளர் மூலம், விண்ணப்பதாரர் முன்விழிப்புணர்வு கொண்டு விடயங்கள் தொடர்பாக உண்மைகளை மறைக்கும்போது பேச்சுவார்த்தை நடத்தி சரியான உண்மைகளை வெளிக்கொண்டு வர வேண்டும். . அத்தகைய விடயங்களில் விண்ணப்பதாரர் உடன்படவில்லை என்றால், அவர் அறிந்த உண்மைகளை வினாக்கொத்தின் முடிவில் குறிப்புகளாக உள்ளிடலாம்.
- விண்ணப்பதாரரின் தகவலை உறுதிப்படுத்தத் தேவையான பதிவுகள், சுகாதாரம் தொடர்பான ஆவணங்கள், மருத்துவப் பதிவுகள், நிலம் அல்லது வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் உரிமத் தரவுகள் என்பனவற்றை விண்ணப்பதாரரிடம் இருந்து சேகரிக்கும் முன் கோரப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும்.

உங்கள் மொபைல் ஃபோனில் IWMS செயலியை பதிவிறக்கம் செய்தல்.

இவற்றைப் பதிவிறக்கம் செய்வதற்கு கீழே உள்ள படிமுறைகளைப் பின்பற்றவும்.

- தொலைபேசியில் ”Google Play Store” ற்குச் செல்லவும்.
- அதன் Search பெட்டியில் IWMS என்று type செய்து தேர்ந்தெடுத்து உள்ளிடவும்.
- அப்போது நலன்புரி நன்மைகள் சபை சின்னத்துடன் கூடிய IWMS என்ற செயலி காட்டப்படும்
- அங்கு காணப்படும் **Install** பொத்தானை **Click** செய்வதன் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

1) படி முறை

2) படி முறை



3) படி முறை



- பதிவிறக்கம் செய்ய சில நிமிடங்கள் ஆகும், மேலும் இந்த மொபைல் செயலியை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் வினாக்கொத்தினைப் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிய வழிகாட்டியை கவனமாக படிக்க வேண்டும்.

<u>**தரவு முறைமையில் எண்ணீடாளரைப் பதிவு செய்தல்..**</u>

1) URL குறிப்பில் iwms.wbb.gov.lk என தட்டச்சு செய்து தேடவும்.

.



2) இதன் பின்னர் நீங்கள் IWMS தரவு முறைமையை அணுகலாம்.

3) இந்தத் திரையில் உள்ள Sign up பொத்தானைக் Click செய்யவும்



4) எண்ணீட்டாளரைப் பதிவு செய்வதற்கான படிவத்தை நிரப்பவும்.

* குறியீட்டால் குறிக்கப்பட்ட அனைத்து நெடுவரிசைகளையும் நிரப்புவது கட்டாயமாகும்.



கீழே உள்ள படிவத்தை நிரப்பவும்.



(1) Organization என்பதில் Grama Niladhari Division என்பதைத் தெரிவுசெய்யவும்

(2) Working Level என்பதில் Grama Niladhari Level என்பதைத் தெரிவுசெய்யவும்

(3) (4) (5) (6) முறையே மாகாணம், மாவட்டம், பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு என்பவற்றை உள்ளிடவும்.

(7) Designation என்பதைத் தேர்ந்தெடுத்து உங்கள் பதவியை உள்ளிடவும்.



(8) (9) உங்களது பெயர் மற்றும் தேசிய அடையாள இலக்கத்தினை உள்ளிடவும்.

(10) குறைந்தபட்சம் 6 எழுத்துக்கள் மற்றும் எண்களைக் கொண்ட கடவுச்சொல்லை கடவுச்சொல்லாக தேர்வு செய்யவும்.

(11) மீண்டும் கடவுச்சொல்லை சரியாக உள்ளிடவும்.

(12) உங்கள் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும். உங்களிடம் மேலதிகமாக மின்னஞ்சல் முகவரி இருந்தால்© அதை இரண்டாம் நிலை மின்னஞ்சலாக உள்ளிடவும்.

(13) செயலி நிறுவப்பட்டுள்ள உங்களது மொபைல் எண்ணை உள்ளிடவும்.



(14) I'm not a robot இனுள் ✓ அடையாளம் இடவும்

(15) Register பொத்தானைக் Click செய்து உங்கள் பதிவை உறுதிப்படுத்தவும்.**தரவு**

சேகரிப்பை ஆரம்பித்தல்

தரவு சேகரிப்புக்காக அந்தந்த வீட்டிற்குச் சென்றதன் பின்னர், உங்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகத்தை நீங்கள் செய்து கொள்ளவேண்டும். அதற்கு பின்வரும் பத்தியைப் பார்க்கவும்.

வணக்கம் என் பெயர்......... நான் நலன்புரி நன்மைகள் சபையின் எண்ணீட்டாளர். நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தில் உள்ள வேறு யாராவது நலன்புரி நன்மை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்திருக்கிறீர்களா? அப்படியானால், உங்கள் வீட்டின் இந்த முகவரி சரியானதா? இந்தத் தரவைச் சேகரிக்க பொதுவாக 40 நிமிடங்கள் ஆகும். இப்போது அதற்காக இந்த நேரத்தை ஒதுக்க முடியுமா?

தவறான தகவல் வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டால் நன்மைகளை இழக்கவும் மேலும் சட்ட நடவடிக்கைகளால் தண்டனைக்கான வாய்ப்பும் உள்ளது என்பதை விண்ணப்பதாரருக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

- நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் பிரிவு 20 இன் படி விண்ணப்பதாரருக்கும் சபையிக்கும் இடையே உள்ள சட்ட ஒப்பந்தம் விண்ணப்பதாரருக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

பிரிவு 20--24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்

அ) பிரிவு 7 இன் துணைப்பிரிவு 3 இன் கீழ் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் அறிக்கையை வெளியிடும் அல்லது பிரிவு 7 இன் துணைப்பிரிவு 1 இன் கீழ் தவறான அல்லது தவறான தகவலை வழங்கும் எந்தவொரு நபரும்,

ஆ) பிரிவு 7 இன் துணைப்பிரிவு 3 இன் படி ஒரு நபரினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை யில் உள்ள குறிப்பிடத்தக்க விவரங்களில் அல்லது பிரிவு 7 இன் துணைப்பிரிவு 1 இன் கீழ் உள்ள தகவல்களில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டால் ஆணையாளருக்கு அறிவிக்கத் தவறிய எந்தவொரு நபரும்,

இ) பிரிவு 11 இன் அடிப்படையில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையில், தவறான அல்லது தவறான தகவலை வழங்கும் எந்தவொரு நபரும்

ஈ) இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு நபரையும் அவரது கடமைகளைச் செய்வதில் தடுத்தல் அல்லது எந்த வகையிலும் தேவையில்லாமல் தலையிடுவது அல்லது எந்த விதத்திலும் செல்வாக்கு செலுத்தி தலையிடுசெய்தல் அல்லது முறையற்ற முறையில் தலையிட அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சிக்கும் எந்தவொரு நபரும்;

உ) சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எந்த உத்தரவுக்கும் இணங்கத் தவறிய எந்தவொரு நபரும், ஊ) இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு, ஒரு நீதவான் முன் விசாரணைக்குப் பிறகு தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபர் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாமல் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

<u>தரவு சேகரிக்க மொபைல் செயலியின் மென்பொருளுக்கான அணுகல்.</u>



- நீங்கள் பதிவிறக்கிய IWMS மொபைல் செயலியை அணுகவும்.
- பிறகு User login திரை தோன்றும்.
- NIC திரையில் உங்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடவும்.
- Password திரைக்கு, IWMS தரவு அமைப்பில் பதிவு செய்யும் போது நீங்கள் வழங்கிய Password உள்ளிடவும்.
- மேலே உள்ள தகவல்களைச் சரியாக உள்ளிட்ட பிறகு, Login பட்டனை அழுத்தவும்.

1. மொழியைத் தெரிவுசெய்தல்.

இந்த மொபைல் செயலி மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது, மொபைல் செயலி எந்த மொழியில் தோன்ற வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.



❖ உங்களுக்கு விருப்பமான மொழியைத் தேர்ந்தெடுத்து திரையில் Click செய்யவும்.

2. விண்ணப்பதாரரை மற்றும் வீட்டினை அடையாளம் காணல்.

நீங்கள் தகவலைச் சேகரிக்கச் சென்ற வீடு மற்றும் விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுக்க /அடையாளம் காண 2 வழிகள் உள்ளன.

1. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் எண்ணீடாளருக்கு ஒதுக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்தல்.

2. QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் வீட்டை அடையாளம் காணுதல்.

மேற்கூறிய இரண்டு முறைகளிலிருந்து உங்களுக்குப் பொருத்தமான முறையைப் பயன்படுத்தவும்.

3. <u>விண்ணப்பத்தைப் பதிவிறக்குதல்</u>.

விண்ணப்ப தாரரின் பெயரைத் தேர்ந்தெடுக் கவும்



பதிவிறக்கம் செய்தல்

- ❖ நீங்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய விண்ணப்பங்களின் பட்டியலுக்குச் சென்று, அந்தந்த விண்ணப்பதாரரின் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்.
- ❖ அந்த விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்யவும்.
- ❖ பின்னர் உரிய விண்ணப்பதாரரின் அடிப்படைத் தகவலைக் கொண்டுள்ள திரையிற்கு செல்லவும்.
- ❖ விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டையைப் பெற்று அடிப்படை விவரங்களை மீண்டும் சரிபார்க்கவும்.

4. QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் உரிய வீட்டை அடையாளம் காணுதல்.

விண்ணப்பதாரர்களின் பெயர்களின் பட்டியல் மற்றும் தகவல்களைச் சேகரிக்க நலன்புரி நன்மைகள் தகவல் பிரிவில் இருந்து QR குறியீடுகள் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் சரியான இடத்தில் (வீட்டில்) இருப்பதை உறுதிசெய்ய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



ஸ்கேன் செய்யும் பொத்தான்



- ❖ QR குறியீட்டை ஸ்கேன் செய்ய பட்டனை அழுத்தவும்.
- ❖ அப்போது உங்கள் மொபைல் போன் கேமரா தானாகவே இயங்க ஆரம்பிக்கும்.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட QR குறியீடுகளுடன் விண்ணப்பதாரர்களின் பட்டியலில் இடது மற்றும் வலதுபுறத்தில் 2 QR குறியீடுகள் இருந்தால், இடதுபுறத்தில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்ய வேண்டும்.
- ❖ பின்னர் விண்ணப்பதாரரின் அடிப்படைத் தகவல்கள் உள்ளிடப்பட்ட திரையில் தானாகவே நுழைவீர்கள்.

5. <u>விண்ணப்பதாரரின் அடிப்படைத் தகவல்களை வாசித்தல்.</u>

மேலே உள்ள ஏதேனும் ஒரு முறையின் மூலம் செயலியினுள் நுழைந்த பின்னர் , விண்ணப்பதாரரின் அடிப்படைத் தகவலுடன் கூடிய திரை தானாகவே தோன்றும்.

- ❖ நீங்கள் பார்வையிட்ட வீட்டின் விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை திரையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகவலுடன் சரியானதா என்பதைச் சரிபார்க்கவும்.
- ❖ நீங்கள் சரியான வீட்டிற்குதான் வந்துவிட்டீர்கள் என்பதை உறுதிசெய்த பின்னர் தரவைச் சேகரிக்க தொடரவும் பொத்தானை அழுத்தவும்

6. வினாத்தாளைப் பூரணப்படுத்த பொருத்தமான மொழியைத் தேர்ந்தெடுங்கள்.

வினாக்கொத்தினைப் பூரணப்படுத்த விண்ணப்பதாரி மொழியை தேர்ந்தெடுக்கும் போது அவர் படித்து புரிந்துகொள்ளக்கூடிய மொழியைத் தேர்ந்தெடுக்கவும். அதற்கு விண்ணப்பதாரரின் சம்மதத்தைக் கேட்டுப் பொருத்தமான மொழியைத் தேர்ந்தெடுங்கள்.



- ❖ விண்ணப்பதாரர் தொடர்பு கொள்ள எளிதான மொழியைத் தேர்ந்தெடுத்து, தொடர்புடைய திரையில் Click செய்யவும்.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மொழியில் வினாக்களைப் பூரணப்படுத்த தொடரவும் பொத்தானை அழுத்தவும்.

7. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்



- விண்ணப்பதாரரைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படும் விண்ணப்பதாரரின் முழுப் பெயர் ஆங்கில பெரிய எழுத்துக்களில் திரையில் தோன்றும். விண்ணப்பதாரரின் பெயரில் மாற்றம் இருந்தால், அதனைத் திருத்தம் செய்து உள்ளிடவும்.

- தரவு சேகரிப்பைத் தொடர முன்னோக்கி என்ற பொத்தானை அழுத்தவும்

- விண்ணப்பதாரரின் வீட்டிற்குத் தரவுகளைச் சேகரிக்கச் செல்லும்போது விண்ணப்பதாரர் இறந்திருந்தால், விண்ணப்பதாரரின் பெயரை மாற்ற வேண்டாம்.நீங்கள் உரிய வீட்டிற்கு வந்துவிட்டீர்கள் என்பதை இந்த **நெடுவரிசை உறுதிப்படுத்தும்.**

- தரவு சேகரிப்பு விண்ணப்பதாரரின் முழு முகவரியும் ஆங்கில பெரிய எழுத்துக்களில் திரையில் தோன்றும். விண்ணப்பதாரரின் முகவரியில் மாற்றம் இருந்தால், அதை திருத்தம் செய்து உள்ளிடவும்.

- <u>தரவு சேகரிப்பைத் தொடர</u> முன்னோக்கி என்ற பொத்தானை அழுத்தவும்.



- ❖ அடிப்படை தகவல்களின் சரியான தன்மையை சரிபார்த்த பிறகு தொடரவும்.
- ❖ தரவு சேகரிப்பைத் தொடர முன்னோக்கி என்ற பொத்தானை அழுத்தவும்.

8. <u>எண்ணீட்டாளரின் சான்றுரை</u>



- ❖ விண்ணப்பத்தை அடையாளம் கண்ட பிறகு, எண்ணீட்டாளர் ஏற்றுக்கொண்ட சான்றுரை இந்தத் திரையில் தோன்றும்.
- ❖ சான்றுரையை ஏற்றுக்கொண்டு தொடரவும்.

9. குடும்பம் என்பதன் வரைவிலக்கணம்

- ❖ இனிமேல் தகவல்களைச் சேகரிப்பதற்கு முன், திரையில் தோன்றும் குடும்பம் என்பதன் வரைவிலக்கணத்தைப் படித்துப் புரிந்துகொண்டு விண்ணப்பதாரரின் குடும்பத்தைப் பற்றிய கருத்தையும் மதிப்பீட்டையும் தெரிந்துகொள்ளவும் . அதன்படி தகவலைப் பெற்றுக்கொள்ளவும். களத்தில் நீங்கள் காணும் அவதானிப்புகளை கேள்வியாகக் கேளுங்கள்.

குடும்பம் என்பதன் வரைவிலக்கணம்.

ஒரு குடும்ப அலகு என்பது விண்ணப்பதாரர், அவரது வாழ்க்கைத்துணை/ அவரை சார்ந்திருக்கும் குழந்தைகள் மற்றும்/அல்லது அவரது/அவள் அல்லது மனைவியின் தாய், தந்தை, திருமணமாகாத சகோதர சகோதரிகள் போன்ற பிற சார்ந்திருப்பவர்கள். அத்தகைய உறுப்பினர்கள் தனித்தனியாக சமைத்து, தினசரி வருமானம் மற்றும் செலவுகளை
தனித்தனியாக செலவழித்தால், அவர்கள் ஒரு தனி குடும்பமாக கருதலாம்.

10. வீட்டில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை



- ❖ இங்கு, குடும்பம் என்ற வரையறையின்படி, வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனவா எனக் கேட்டு, தரவை உள்ளிடவும். சரியான பதிலை ஆம் அல்லது இல்லை எனக் குறிக்கவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

- 10 வது திரை தொடர்பான கேள்விக்கான பதில் ஆம் எனில், அந்த வீட்டில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.
- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

11. இதுவரையில் ஒரு குடும்பத்திற்காவது தரவு சேகரிக்கப்பட்டுள்ளதா.?



- ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசிப்பின்,அதில் ஒரு குடும்பத்தின் தரவாவது சேகரிக்கப்பட்டதா எனக் கேட்டு, பொருத்தமான பொத்தானைக் கிளிக் செய்யவும்.
- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

12. எண்ணீட்டாளரால் QR குறியீட்டை ஸ்கேன் செய்தல்.



- 11வது திரை தொடர்பான கேள்விக்கான பதில் ஆம் எனில், தற்போது வீட்டில் வசிக்கும், எண்ணீட்டிற்கான குடும்பத்தின் QR குறியீட்டை ஸ்கேன் செய்து தரவு சேகரிப்பை நிறுத்தவும். பதில் இல்லை என்றால், தரவு சேகரிப்பைத் தொடரவும்.

- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

13. குடும்பத்தில் உள்ள வேறு யாரேனும் வேறு விண்ணப்பத்தினத் சமர்ப்பித்திருந்தால்



- ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனித்தனியாக நலன்புரி நன்மைகளுக்கு விண்ணப்பித்திருந்தால், "ஆம்" என்பதைத் தேர்ந்தெடுக்கவும், இல்லையெனில், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

14. இதுவரையில் இந்தக் குடும்பம் எண்ணீட்டுக்கு உட்பட்டுள்ளதா?



- ❖ ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசித்தால், ஒரு குடும்பத்திலாவது தரவு சேகரிக்கப்பட்டுள்ளதா?, என விசாரிக்கவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

15. QR குறியீடு ஸ்கேனிங் செய்தல்

- ❖ இதற்கு முன்பு இக் குடும்பம் எண்ணிடப்பட்டிருந்தால் QR குறியீட்டை ஸ்கேன் செய்து தரவு எண்ணீட்டை முடிக்கவும்.
- ❖ QR குறியீடு ஸ்கேனிங் பட்டனைக் Click செய்யும் போது, மொபைல் போனின் கேமரா தானாகவே இயக்கப்படும்.

16. <u>குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை.</u>



- ❖ குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை இங்கே உள்ளிடவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

17. <u>உறுப்பினரின் வரிசை எண்.</u>



- ❖ குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை உள்ளிட்ட பிறகு, குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வரிசை எண் தானாகவே உருவாக்கப்படும்.
- ❖ இந்த வரிசை எண் வீட்டு அலகு எண் மற்றும் தகவலைப் பெறும் உறுப்பினரின் எண்ணின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.
- ❖ உதாரணம் - தகவலைப் பெறும் முதல் உறுப்பினர் தொடர்பான வரிசை எண் 1-2-21-02-030-00004-01 என உருவாகும்.

18. <u>விண்ணப்பதாரருடனான உறவுமுறை</u>



- ❖ விண்ணப்பதாரர் தனது தகவலைச் சேர்க்கும்போது விண்ணப்பதாரர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
- ❖ விண்ணப்பதாரருக்கும் ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் உள்ள உறவை உள்ளிடவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

19. <u>உறுப்பினரின் முழு பெயர்</u>



- ❖ உரிய உறுப்பினரின் முழுப் பெயரை ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடவும். விண்ணப்பத்தினை சிங்களம் அல்லது தமிழில் பூர்த்தி செய்த உறுப்பினரின் பெயரை இங்கு ஆங்கில பெரிய எழுத்துக்களில் உள்ளிடுவதை உறுதி செய்யவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

20. <u>பால் நிலை</u>



- ❖ சம்பந்தப்பட்ட உறுப்பினரின் பாலினத்தை சரியாக உள்ளிடவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

21. விவாக நிலை



- ❖ உறுப்பினரின் திருமண நிலையைப் பற்றிய சரியான உருப்படியைத் தேர்ந்தெடுக்கவும்.
  - விவாகமாகாதவர்
  - விவாகமானவர்
  - விதவை / தபுதாரர்
  - விவாகரத்தானவர்
  - பிரிந்து வாழ்பவர்கள்
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்.

22. உறுப்பினரின் பிறந்தநாள்



- ❖ திரையில் ட்டத்தில் காட்டப்படும் நாட்காட்டியைப் பயன்படுத்தி சரியான ஆண்டு,மாதம் மற்றும் தேதியைத் தேர்ந்தெடுக்கவும். சரியான பிறந்த தேதியைத் தேர்ந்தெடுத்த பிறகு, திரையில் சரி என்பதை அழுத்தவும்.
  (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த தேதியுடன் இது பொருந்துகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்)
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

23. உறுப்பினரின் வயது



- ❖ இந்தத் திரையில் உறுப்பினரின் பிறந்த தேதியைக் கருத்தில் கொண்டு வயது தானாகவே காட்டப்படும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

24. உறுப்பினரின் மொபைல் தொலைபேசி எண்

- ❖ உரிய உறுப்பினரின் மொபைல் தொலைபேசி எண் இருந்தால், தொலைபேசி எண்ணைக் குறிப்பிடவும். தொலைபேசி எண்ணை உள்ளிடும்போது, அனைத்து 10 எண்களையும் முதல் 0 உடன் உள்ளிடவும். (சரியான மொபைல் தொலைபேசி எண்களை உள்ளிடுவதன் மூலம் தகவலைத் தெரிவிப்பது எளிதாக இருக்கும் என்பதை விளக்கி எண்ணைப் பெறுங்கள்)
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

25. உறுப்பினரின் தேசிய அடையாள அட்டை எண்



- தேசிய அடையாள அட்டை எண்ணை சரியாக உள்ளிடவும் (அடையாள அட்டையை சரிபார்த்து இதை குறித்துக்கொள்ளவும்)
- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

26. உறுப்பினரின் தேசிய அடையாள அட்டையின் முன்புற புகைப்படம்



- புகைப்படத்தைப் பெறு என்ற பொத்தானைக் Click செய்து தேசிய அடையாள அட்டையின் முன் புகைப்படத்தைப் பெறவும்.
- இங்கே, உரிய உறுப்பினரின் புகைப்படம் தெளிவாகத் தெரியும்படி பெறவும்.

27. உறுப்பினரின் தேசிய அடையாள அட்டையின் பின்புற புகைப்படம்



- ❖ புகைப்படத்தைப் பெறு என்ற பொத்தானைக் Click மூலம் தேசிய அடையாள அட்டையின் பின் புகைப்படத்தை எடுக்கவும்.
- ❖ பின்பக்கம் உள்ள தகவல்கள் தெளிவாகத் தெரியும்படி புகைப்படம் எடுக்கவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

28. உறுப்பினரின் கல்வி மட்டம்



- ❖ தற்போது ஒரு பாடசாலை அல்லது பிற கல்வி நிறுவனத்தில் படிக்கும் அந்த கல்வி மட்டத்தை உள்ளிடவும். (05 வயது முதல் 16 வயது வரை)
    - முன் பள்ளி
    - பாடசாலை
    - பல்கலைக்கழகம்
    - தொழில் நுட்பம் /தொழில் பயிற்சி நிறுவனம்
    - மாற்றுத்திறனாளர் கல்வி நிறுவனம்
    - வேறு கல்விநிறுவனம்
    - படிக்கவில்லை
- ❖ தரவு சேகரிப்பின் போது உறுப்பினர் கல்வியில் ஈடுபடவில்லை என்றால், படிக்கவில்லை என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

29. <u>உறுப்பினரின் மிக உயர்ந்த கல்வி மட்டம்</u>



உறுப்பினர் அடைந்துள்ள மிக உயர்ந்த கல்வி நிலை என்ன? கீழே உள்ள உருப்படிகளில் இருந்து கேள்விக்கான சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து உள்ளிடவும்.

- மாற்றுத்திறனாளர் கல்வி
- தரம் 1 சித்தி
- தரம் 5 சித்தி
- தரம் 8 சித்தி
- தரம் 10 சித்தி
- க.பொ.தா (சா.தர) சித்தி
- க.பொ.தா (உ.தர) சித்தி
- பட்டதாரி
- முதுகலை பட்டதாரி
- ஒருபோதும் பாடசாலை செல்லவில்லை

பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

30. <u>உறுப்பினர் பெற்றுக்கொண்ட தொழிற்கல்வி மட்டம்.</u>



❖ அந்த உறுப்பினரின் மிக உயர்ந்த தொழில் கல்வி மட்டத்தினைக் காட்டும் உரிய உருப்படியைத் தெரிவுசெய்து அதற்குரிய பொத்தானைக் Click செய்யவும். அதைப் பற்றி அவருக்குத் தெரியாவிட்டால், தெரியாது

❖ என்ற உருப்படியைக் Click செய்யவும்.

31. <u>உறுப்பினர் ஈடுபட்டுள்ள முக்கிய பொருளாதார நடவடிக்கை.</u>



❖ செய்துகொண்டிருக்கும் வேலையின் தன்மைக்கு உரிய உருப்படியினைத் தெரிவுசெய்து அதன் பொத்தானைக் Click செய்யவும்.

❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

- எவ்வித பொருளாதார செயற்பாடும் இல்லை
- அரசாங்க உத்தியோகத்தர்
- பகுதி அரசாங்க உத்தியோகத்தர்
- தொழில்வழங்குநர்
- சுயதொழில்
- நாளந்த கூலி
- குடும்ப தொழிலுக்கு பங்களிப்பவர்
- தனியார்துறைத் தொழிலாளி
- ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்
- தொழில் தேடுபவர்
- தொழில் செய்ய இயலாதவர்

ஆலோசனை :

- உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், அவர்/அவள் முறையாக ஈடுபடும் முக்கிய பொருளாதார நடவடிக்கையை முக்கிய பொருளாதார நடவடிக்கையாக தேர்ந்தெடுக்கவும்.

- அவர்/அவள் ஈடுபடும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் முறையானதாக கருதப்படாவிட்டால், நீண்ட காலமாக ஈடுபட்டுள்ள பொருளாதார நடவடிக்கையை குறிப்பிடவும்.

- உறுப்பினர் சுயதொழில் செய்தாலும், அவருக்குக் கீழ் பணியாளர்கள் இருந்தால், அவர்கள் முதலாளிகளாகக் கருதப்படுவார்கள்.

- உறுப்பினர் சம்பளம் பெறாமல் குடும்ப வணிகத்தில் பங்களித்தால் உருப்படி 6ஐத் தேர்ந்தெடுக்கவும்.

- உறுப்பினர் தனியார் துறையில் பணிபுரிபவரா அல்லது அவரது சொந்த பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவரா என்பதை கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த நபர் தனது வேலையைப் பற்றி சுயாதீனமான முடிவுகளை எடுக்க முடிந்தால், அவர்கள் சுயதொழில் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள்

- எ.கா - ஒரு மேலதிக வகுப்பு ஆசிரியர் வீட்டுக்கு வீடு வகுப்புகளை நடத்தினால், அவர் தனியார் துறை வேலையில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர் / அவள் தனது சொந்த இடத்தில் வகுப்புகளை நடத்தினால், அவர் / அவள் ஈடுபடுவதாகவும் கருதப்படுகிறது.

- உறுப்பினர் வீடு வீடாக தேங்காய் பறிப்பது போன்ற கூலி வேலைகளில் ஈடுபட்டால், அவர் தனியார் துறையில் பணிபுரிந்தவராக கருதப்படுவார். ஆனால், அந்த வேலைக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி, அதைத் தொடர்ந்து செய்தால், அவர்கள் தங்கள் சொந்த பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள்.அவரது சொந்த பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

- ஒரு உறுப்பினர், அவர் அல்லது அவள் தொடர்ந்து ஊழியர்களைப் பணியமர்த்தி, அவர்களுக்கு தினசரி/வாரம்/மாதாந்த நிதி அல்லது பொருள் கொடுப்பனவுகளைச் செலுத்தினால் மட்டுமே அவர் ஒரு முதலாளியாகக் கருதப்படுவார்.
- இந்தக் கட்டணம் தினசரி/வாராந்திர/மாதாந்த நிதிக் கொடுப்பனவு அல்லது வேறு சில பொருள் கொடுப்பனவாகவும் இருக்கலாம்.

32. <u>உறுப்பினர் ஈடுபட்டுள்ள முக்கிய பொருளாதார நடவடிக்கை.</u>



- ❖ செய்துகொண்டிருக்கும் வேலையின் தன்மைக்கு உரிய உருப்படியினைத் தெரிவுசெய்து அதன் பொத்தானைக் Click செய்யவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

33. தற்போது பெற்றுக்கொள்ளும் சமூக நலன்புரித் திட்டங்கள் பற்றிய தகவல்கள்.



- ❖ சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஏற்கனவே அரசாங்க உதவியைப் பெறுகிறாரா? இல்லையா ? எனக் கேட்டு ஆம் அல்லது இல்லை என்பதைத் தேர்ந்தெடுத்து Click செய்யவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

34. அரசிடம் இருந்து கிடைக்கப்பெறும் சமூக நலத் திட்ட உதவிகள் என்ன

- ❖ உரிய உறுப்பினர் பெறும் அனைத்து சமூக நலத்திட்ட உதவிகளையும் உள்ளிடவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

35. உறுப்பினரின் இயலாமை (சிரமம்) பற்றிய தகவல்கள்



- இந்தத் திரையினை நிரப்புவதற்கு முன் வழிகாட்டி கையேட்டில் உள்ள இயலாமை பற்றிய விளக்கத்தைப் படித்து புரிந்து கொள்ளுங்கள்.
- உறுப்பினர் அனுபவிக்கும் கடுமையான இயலாமையை மட்டும் தேர்ந்தெடுக்கவும். பிரச்சனைகள் எதுவும் இல்லை என்றால், பிரச்சனை இல்லை என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்



- உறுப்பினர் எதிர்கொள்ளும் இயலாமையின் பாதிப்பின் அளவினைக் கேட்டு உள்ளிடவும்.
- பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

இயலாமை பற்றிய தகவல்கள்

குழுவின் குறிக்கோளானது குடும்பத்தில் யாதேனுமொரு அங்கத்தவருக்கு அல்லது அங்கத்தவர்களுக்கு தமது அன்றாட வேலைகளைச் செய்து கொண்டு போவதனை சிரமப்படுத்துகின்ற ஏதும் உடல் அல்லது உள அசௌகரிய நிலைமை காணப்படுகின்றதா என்பதை தேடிப் பாரப்பதாகும்.
இதன் கீழ் தரப்பட்டுள்ள குறியீடுகளுக்கான விளக்கம் தரப்பட்டுள்ளது.

- பார்வை
- கேட்டல்
- நடத்தல் அல்லது படியேறுதல்
- ஞாபகம் வைத்துக்கொள்ளல் அல்லது ஒரு விடயத்தில் கவனம் செலுத்துதல்
- ஆடை உடுத்தல் அல்லது உடலைக் கழுவிக்கொள்ளுதல் போன்ற தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதல்
- அடுத்தவருடன் கருத்துப் பரிமாறிக் கொள்ளுதல்

போன்ற காரணங்கள் தொடர்பாக ஏதும் அசௌகரிய நிலைகள் உள்ளதா என கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப தேடிக் கண்டறிந்து மிகவும் அதிகம் அசௌகரியமாக உள்ள நிலைமை எது என கேட்டறிந்து தரப்பட்டுள்ள குறியீடுகளுள் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

பார்வைச் சிரம நிலைமை

- இங்கே எதிர்பார்க்கப்படுவது எந்த வயதைச் சாரந்தவரெனினும் பார்வை தொடர்பான சிரம நிலைமைகளுடன் உள்ள நபர்கள் உள்ளனரா எனத் தேடிப்பார்ப்பதாகும். எனவே இங்கு ஒரு கண்ணா அல்லது இரண்டு கண்களுமா என்பது பொருந்துவதில்லை.
- எனவே பார்வை சீராக்கத்திற்காக மூக்குக் கண்ணாடி அல்லது வில்லை பயன்படுத்தும் நபர்கள் மற்றும் அவ்வாறு பயன்படுத்தும் போதும் பார்வையில் சிரம நிலைமைகள் உள்ளதா என விசாரிப்பதும் வேண்டும்.
- மூக்குக் கண்ணாடி பயன்படுத்தாத நபரெனின், பயன்படுததும் நபரொருவர் அவ்வாறு பயன்படுத்தும் பொது ஒரு அசௌகரியமும் இல்லை எனக் கூறுவாராயின், அவரை பார்வை தொடர்பான சிரமம் இல்லாத நபர் எனக் கொள்க.

கேட்டல் அசௌகரியம்

- நபரொருவர் கேட்டலுக்காக ஏதும் கேட்டல் கருவியொன்றினைப் பயன்படுத்துகின்றாராயின், அவ்வாறான நபரிடத்திலும் அவ்வாறு பயன்படுத்தும் போதும் கேட்டல் அசௌகரியம் உள்ளதா என வினவுதல் வேண்டும்.
- கேட்டல் கருவி பயன்படுத்தாத நபர்கள், பயன்படுத்தும் நபரொருவர், அவ்வாறு பயன்படுத்தும் போது கேட்டல் தொடர்பான அசௌகரியம் எதுவும் இல்லை எனக் குறிப்பிடுவாராயின், அவ்வாறான நபர்கள் கேட்டல் அசௌகரியம் அற்ற நபர்கள் எனக் கொள்ளப்படுவர்.

சிறு தூரம் நடத்தல் அல்லது படி ஏறுதல்

- எந்த வயதுடையவராயினும் சிறு தூரம் நடப்பதற்கோ அல்லது 12 படிகள் அளவில் ஏறுவதற்கோ அல்லது இறங்குவதற்கோ சிரமப்படுகின்றார்களா என கண்டறிவது இங்குள்ள எதிர்பார்ப்பாகும்.

- நடத்தல் என்பதால் குறிக்கப்படுவது, வீட்டினுள் சுவரைப் பிடித்த வண்ணம் அங்கும் இங்கும் நடப்பதல்ல. சாதாரணமாக 100 அ அளவான தூரம் சிரமமின்றி நடப்பதற்கு முடியுமாக இருப்பதாகும். 12 படிகள் அளவு ஏறுதல் அல்லது இறங்குதல் என்பது 12 படிகள் அளவில் சிரமமின்றி ஏற அல்லது இறங்க முடியுமாக இருப்பதாகும்.

- எனவே நடப்பதற்கு மற்றும் 12 படிகள் அளவில் ஏறுவதற்கு மற்றும் இறங்குவதற்கு முடியும் எனக் குறிப்பிடுகின்ற நபர்கள் நடப்பதற்கு அல்லது படி ஏறுவதற்கு சிரமம் இன்றிய நபர்கள் எனக் கொள்க.

ஞாபகம் வைத்துக்கொள்ளல் அல்லுத ஓரு விடயத்தில் கவனம் செலுத்துதல்

- எந்த வயதுடையவராயினும், உடல் ரீதியான அல்லது மன ரீதியான காரணங்களால் ஞாபகம் வைத்;துக்கொள்ளல் அல்லது ஒரு விடயத்தில் கவனம் செலத்துவதில் அசௌகரியங்கள் உள்ளதா என தேடிப் பார்ப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- சில நபர்கள் தமக்கு எப்போதும் ஏற்படுகின்ற ஞாபகமறதி காரணமாக தாம் அன்றாடம் செய்ய வேண்டிய முக்கியமான வேலைகள் தொடர்பாக குறித்து வைத்துக்கொள்ளல் போன்ற பல வழிமுறைகளைக் கையாள்வதைக் கவனத்தில் கொண்டு விசாரிக்கப்படலாம்.
- எனினும் சூழல் மாறுவதன் காரணமாகவோ திடீரென ஏற்படும் மாற்றங்கள் காரணமாக சிறு விடயங்கள் ஞாபகமறதியாவது போன்றன கவனத்தில் கொள்ளப்பட தேவையில்லை.
- ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் அல்லது கவனத்தில் வைத்துக்கொள்வதிலான அசௌகரியங்கள் இல்லாத நபர்கள் இவ்வாறான அசௌகரரியங்கள் அற்ற நபர்கள் எனக் கொள்க.

ஆடை உடுத்திக்கொள்ளல் அல்லது உடல் கழுவிக்கொள்ளல் போன்ற தமது வேலைகளை தாமாகச் செய்துகொள்ளல்

- இங்கு கவனத்தில் கொள்ளப்படுவது எந்த வயதுடைய தனிநபராயினும் தமது கை மற்றும் விரல்களைப் பயன்படுத்தி தமது அன்றாட வேலைகளை தாமாக செய்துகொள்வதில் அசௌகரியங்களை கொண்டுள்ளனரா என்பதாகும்.
- ஒரு நபர் தமது ஆடைகளை உடுத்திக்கொள்ளல், உடல் கழுவிக்கொள்ளல் போன்ற அன்றாட வேலைகளை அல்லது ஒருவருக்கு இலகுவாக உயர்த்தக்கூடிய சாதாரண பாரமொன்றை தமது இடுப்புப் பிரதேசத்திலிருந்து கண் மட்டம் வரையான உயரத்திற்கு உயர்த்துவதற்கு அல்லது தரையில் உள்ள பொருiளான்றை இலகுவாக தூக்கி எடுத்தல் போன்ற செயல்களை சிறிதும் சிரமமின்றி தானே தனியாக செய்துகொள்ளக்கூடிய நபர்கள் இவ்வசௌகரியம் அற்றவர்கள் எனக் கொள்ளப்படுவர்.

மற்றவர்களுடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளல்

- இதன் குறிக்கோளானது, எந்த வயதினராயினும், தமது கருத்துக்களை மற்றவர்களுடன் பரிமாறிக்கொள்வதில் சிரமமுள்ள நபர்களைப் பற்றி தேடி ஆய்வதாகும்.
- யாNனுமொரு உடல் ரீதியான அல்லது உளரீதியான காரணத்தினால் சாதாரணமாக தாம் பயன்படுத்தும் மொழியில் மற்றுமொரு நபருடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதில் சிரமங்கள் உள்ளதா என தேடியறிவதாகும்.
- இவ்வினாவினூடாக இரண்டு விடயங்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றன. அதாவது, மற்றவருக்கு புரிந்துகொள்ளும் வண்ணம் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு மற்றும் மற்றவர் கூறும் ஒரு விடயத்தை புரிந்துகொள்வதற்கு சிரமம் உள்ளதா என தேடி அறிவதாகும். எனினும் குறைந்த பட்சம் இதில் ஒரு குறைபாடெனினும் ஒரு நபருக்கு இருப்பின் கருத்தில் கொள்ளப்படும்.
- மற்றுமொரு நபருடன் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்வதில் எவ்வித சிரமமும் இல்லாத நபர்கள் அசௌகரிய நிலை அற்ற நபர்கள் எனக் கொள்ளப்படுவர்.

- மேலே கூறப்பட்ட பார்வை, கேட்டல், நடத்தல் மற்றும் படி ஏறுதல், ஞாபகத்தில் வைத்திருத்தல் அல்லது கவனம் செலுத்துதல், ஆடை உடுத்துதல் அல்லது உடலைக் கழுவிக் கொள்ளுதல் போன்ற தமது செயற்பாடுகளை தாமே செய்துகொள்ளல் மற்றும் மற்றவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல் போன்ற எந்தவித சிரம நிலையும் இல்லையாயின் அவ்வாறான நபர்களுக்காக "மேலே உள்ள எந்தவொரு அசௌகரியமும் இல்லை" எனும் குறியீட்டினை தெரிவுசெய்க.

பார்வை

- கண்ணாடி அணியாதவர் அல்லது கண்ணாடி அணிந்தவர் அதை அணிந்திருக்கும் போது தொலைவில் அல்லது அண்மையில் உள்ளவற்றைப் பார்ப்பதில் சிரமம் இருப்பதாகக் கூறினால், அத்தகைய நபர்களுக்கு "சற்றே கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- கண்ணாடி அணியாதவர் அல்லது கண்ணாடி அணிந்திருப்பவர், அவற்றை அணிந்தாலும், தொலைவில் அல்லது அண்மையில் உள்ளவற்றைப் பார்ப்பதில் சிரமம் இருப்பதாகவும், அது அன்றாட நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதிக்கிறது என்றும் கூறினால், அத்தகைய நபர்களுக்கு "மிகக் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- சிறிதும் பார்வையற்றவர்களுக்கு "முற்றிலும் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- ஒருவரால் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்க முடிந்தால், அவர் கூறும் அசௌகரியத்தின் தன்மைக்கு ஏற்ப அதற்கான குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.

கேட்டல்

- செவிப்புலன் கருவியைப் பயன்படுத்தாதவர் அல்லது செவிப்புலன் கருவியைப் பயன்படுத்துபவர் அதைப் பயன்படுத்துவதில் அல்லது கேட்கையில் சில சிரமங்கள் இருப்பதாகக் கூறினால், அத்தகையவர்களுக்கு "சற்றே கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- செவிப்புலன் கருவியைப் பயன்படுத்தாத ஒரு நபர் அல்லது செவிப்புலன் கருவியைப் பயன்படுத்துபவர் அதைப் பயன்படுத்துவதில் அல்லது கேட்பதில் சில சிரமங்கள் இருப்பதாகக் கூறினால், அது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனின், அத்தகைய நபர்களுக்கு: "மிகக் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- முற்றிலும் காது கேளாதவர்கள் அல்லது வேறு காரணங்களுக்காக கேட்க முடியாது என்று கூறுபவர்களுக்கு " முற்றிலும் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.

சிறிது தூரம் நடத்தல் அல்லது படிக்கட்டுகளில் ஏறுதல்

- முதுமை அல்லது ஏதேனும் இயலாமை (தற்காலிகமற்றது) காரணமாக மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி ஒரு நபர் நடக்கவோ அல்லது படிக்கட்டுகளில் ஏறவோ அல்லது இறங்கவோ சிரமப்படுகிறார் என்று கூறப்பட்டால். அத்தகைய நபர்களுக்கு "சற்றே கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- முதுமை அல்லது ஏதேனும் இயலாமை (தற்காலிகமற்றது) காரணமாக மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி ஒரு நபர் நடக்கவோ அல்லது படிக்கட்டுகளில் ஏறவோ அல்லது இறங்கவோ சிரமப்பட்டால், அது அன்றாட நடவடிக்கைகளை கடுமையாக பாதிக்கிறது என்றால், அத்தகைய நபர்களுக்கு "மிகக் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- எடுத்துக்காட்டாக, ஒரு நபர் இரு கால்களும் முற்றிலும் செயலிழந்திருந்தால் அல்லது முழங்காலுக்கு மேல் இரு கால்களையும் இழந்து சக்கர நாற்காலியைப் பயன்படுத்துவது போன்ற பிற ஆதரவைப் பயன்படுத்தினால் "முற்றிலும் கடினம்" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.

நினைவில் வைத்திருத்தல் அல்லது எவற்றிலாவது கவனம் செலுத்துதல்

- ஒரு நபர் அடிக்கடி மறதி அல்லது கவனம் செலுத்துவதில் சிரமம் இருப்பதாகக் கூறினால், அத்தகைய நபர்களை "சற்று கடினம்" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- ஒரு நபர் அடிக்கடி மறதி அல்லது கவனம் செலுத்துவதில் சிரமம் இருப்பதாகக் கூறினால் , அது அவரது அன்றாட நடவடிக்கைகளை கடுமையாகப் பாதித்தால், "மிகக் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- மந்த புத்தி , உளவியல் காரணங்கள் அல்லது பிற மருத்துவ நிலைகள் காரணமாக எதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாத அல்லது எதிலும் கவனம் செலுத்த முடியாத நபர்களுக்கு "முற்றிலும் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.

ஆடை அணிவது அல்லது உடலைக் கழுவுவது போன்ற சொந்தக் காரியங்களைச் செய்வது

- ஒரு நபர் தனது ஆடை அணிவது உடலைக் கழுவுதல் போன்ற அன்றாட நடவடிக்கைகளை செய்தால், அல்லது ஒரு நபர் தனது இடுப்பிலிருந்து கண் மட்டம் வரை மிக எளிதாக தூக்கக்கூடிய ஒரு சாதாரண pகனமுடைய பொருளைத் தூக்குதல் அல்லது தரையிலிருந்து எதையாவது சிரமமின்றி எளிதாக எடுப்பது போன்ற பணிகளைச் செய்யாவிட்டால், அத்தகைய நபர்களுக்கு "சற்றே கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- முழங்கைக்குக் கீழே ஒரு கை அகற்றப்பட்டிருந்தால் அல்லது செயலிழந்ததால் அல்லது கைவிரல்கள் இல்லாமல் இருந்தால் அல்லது செயலிழந்திருப்பதால் தங்கள் சொந்த வேலையைச் செய்வதில் சிரமம் இருப்பதாகக் கூறும் நபர்களுக்கு குறியீட்டை "மிகக் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- இரண்டு கைகளும் முழங்கைக்கு மேலே அகற்றப்பட்டிருந்தாலோ அல்லது இரண்டு கைகளும் ஊனமுற்றிருந்தாலோ அல்லது அப்படிப்பட்டவர்களுக்கு முற்றிலும் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.

மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுதல்

- ஏதேனும் ஊனம் காரணமாக அல்லது உடல் அல்லது உளவியல் காரணங்களால் அல்லது மற்றொரு நபருடன் தொடர்புகொள்வதில் சிரமம் இருப்பதாகக் கூறும் நபர்களுக்கு குறியீட்டை "சற்றே கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- ஏதேனும் ஊனம் காரணமாக அல்லது உடல் அல்லது உளவியல் காரணங்களால் மற்றொரு நபருடன் தொடர்புகொள்வதில் ஏதேனும் சிரமம் இருந்தால், அது அன்றாட நடவடிக்கைகளை கடுமையாக பாதித்திருந்தால், அத்தகைய நபர்களுக்கு "மிகக் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.
- முற்றிலும் ஊமை அல்லது காது கேளாதவர்கள் அல்லது பிற உடல் அல்லது மன காரணங்களால் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதவர்கள், "முற்றிலும் கடினமானது" என்ற குறியீட்டைத் தேர்ந்தெடுக்கவும்.

36. உறுப்பினரின் அங்கவீனம் பற்றிய தகவல்



- ❖ சம்பந்தப்பட்ட உறுப்பினர் அங்கவீனராக இருந்தால் ஆம் அல்லது இல்லை என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
- ❖ பின்னர் முன்னோக்கி என்ற பட்டனை Click செய்யவும்

37. அங்கவீனம் பற்றிய தகவல்



- ❖ அங்கவீனம் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் முன், வழிகாட்டியில் உள்ள விளக்கத்தைப் புரிந்து கொள்ளவும்
- ❖ உரிய உறுப்பினர் முடக்கப்பட்டிருந்தால், அங்கவீன நிலையைத் தேர்ந்தெடுக்கவும். தொடர்புடைய அங்கவீனத்தினைத் தேர்ந்தெடுத்த பிறகு, அதற்குக் கீழே அங்கவீனம் எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கான சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
  - கண் பார்வையற்றவர்
  - காது கேட்டல் குறைபாடு
  - பேச்சுக் குறைபாடு
  - அறிவுசார் குறைபாடுகள்/மனவளர்ச்சி குறைவு
  - பக்கவாத நோயால் அவதிப்படுதல்
  - ஓட்டிசம்
  - கைகள் அல்லது கால்கள் இழந்தவர்கள் / உடற்குறைபாடு / முடம்
  - முதுகுத் தண்டு பாதிப்பு (இடுப்பிற்கு கீழே உணர்வற்றநிலை / உடல் ஊனம்)
  - மனநல பாதிப்பு /கடுமையான மன நல நோய்கள்
  - வலிப்பு
  - பல வகை ஊனங்கள்
- ❖ இந்த அங்கவீனம் தொடர்பாக உறுப்பினரின் மருத்துவப் பதிவுகளை இங்கே சரிபார்க்கவும்.
